பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

30 08-2025 SATURDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. பாதுகாப்புத்துறையில் சுயசார்பை எட்டுவது நாட்டின் வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும் அவசியமானது என்று மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
2. நகர்ப்புற தூய்மைப் பணிகளை அனைத்து மாநிலங்களும் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு மனோகர்லால் வலியுறுத்தியுள்ளார்.
3. ஜெர்மன், இங்கிலாந்து நாடுகளில் தமது பயணத்தின்போது புதிய தொழில் முதலீட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
4. தமிழகத்தில் உள்ள பறவைகள் சரணாலயங்கள் மற்றும் நீர்நிலைகளில் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் மாபெரும் இயக்கம் இன்று தொடங்கப்பட்டது.
5. காமன்வெல்த் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

-- இனி விரிவான செய்திகள்

<<<<<<<<>>>>>

பாதுகாப்புத்துறையில் சுயசார்பை எட்டுவது நாட்டின் வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும் அவசியமானது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற பாதுகாப்புத்துறை மாநாட்டில் உரையாற்றிய அவர், சுயசார்பு இந்தியா இயக்கம் நாட்டின் பொருளாதாரத்தையும், பாதுகாப்பையும் உறுதி செய்யும் என்று கூறினார்.

ஆபரேஷன் சிந்தூர் வெற்றிக்கு உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ராணுவ தளவாடங்களும், நமது விஞ்ஞானிகள் உருவாக்கிய வான்வெளி பாதுகாப்பு கட்டமைப்பும் உறுதுணையாக இருந்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

பாகிஸ்தான் இலக்குகள் துல்லியமாக தாக்கி அழிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்புத்துறையில் இந்தியா மேற்கொண்ட நீண்டகால ஆயத்தப்பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டதால்தான், ஆபரேஷன் சிந்தூர் என்ற மாபெரும் வெற்றியை பெற முடிந்ததாக அவர் கூறினார்.

முப்படையினரின் திறமை மற்றும் கடுமையான உழைப்பு உள்நாட்டு பாதுகாப்பு தளவாடங்களில் அவர்கள் வைத்த நம்பிக்கை ஆபரேஷன் சிந்தூரை வெற்றிகரமாக செயல்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் எதிர்கால பாதுகாப்புக்கு சுதர்சன் சக்ரா இயக்கம் முக்கிய பங்கு வகிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த வான்வழி தாக்குதல் கட்டமைப்பை பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்தின் விஞ்ஞானிகள் சிறப்பாக சோதித்து பார்த்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் பாதுகாப்பு தொலைநோக்குத் திட்டத்தை நனவாக்கும் வகையில், புதிய ரக போர் விமானங்களும், போர் கப்பல்களும், உற்பத்திக்கான இந்தியா திட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>

நகர்ப்புறங்களில் தூய்மைப்பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் துப்புரவுப்பணிகளை துரிதகதியில் மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு மனோகர்லால் கேட்டுக்கொண்டுள்ளார்.

நகர்ப்புற தூய்மை இந்தியா இயக்கத்தின் உயர்மட்ட கூட்டத்தில் அனைத்து மாநில பிரதிநிதிகளுடன் காணொலி வாயிலாக இன்று பேசிய திரு மனோகர்லால், நகர்ப்புற வளர்ச்சித்திட்டப் பணிகளுடன், தூய்மைப்பணிகளும் இணைந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கூறினார்.

நகர்ப்புற வளர்ச்சிக்கான திட்டமிடலில் தூய்மைப்பணிகளும் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

நகர்ப்புறங்களில் உள்ள நிலங்களை குறிப்பிட்ட கால அடிப்படையில் தூய்மைப்படுத்துவதற்கான செயல்திட்டத்தை தமது அமைச்சகம் வகுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தூய்மைப்பணிகளை தொடர்ந்து ஆய்வு செய்து மேம்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஸ்வச்சதா செயலியை பயன்படுத்தி, மக்களிடமிருந்து தூய்மைப்பணிகள் தொடர்பான கோரிக்கைகள் மற்றும் கருத்துக்களை பெற்று பணிகளை முடுக்கி விட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தூய்மைப்பணிகளுக்கான இலக்குகளை எட்டுவதன்மூலம், மக்களுக்கு வளமான சுற்றுச்சூழலை உருவாக்கி, கண்ணியமான வாழ்க்கைக்கு மாநிலங்களும். யூனியன் பிரதேசங்களும் வழிவகுத்திட வேண்டும் என்றும் திரு மனோகர்லால் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<<>>>>>

தமிழகத்தில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று புறப்பட்டு சென்றார்.

தமது பயணத்தை தொடங்கும்முன் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த இரு நாடுகளுக்கும் தாம் மேற்கொள்ளும் ஒருவார கால பயணத்தின்போது, தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அங்குள்ள தொழில்துறையினரை சந்திக்க இருப்பதாக தெரிவித்தார்.

இவ்விரு நாடுகளுடனும் புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடவும் திட்டமிடப்பட்டிருப்பதாக திரு மு.க.ஸ்டாலின் கூறினார்.

<<<<<<<<>>>>>

நாட்டின் பொருளாதாரம் விரைவாக வளர்ந்துவரும் சூழ்நிலையில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஏழு புள்ளி எட்டு சதவீதமாக உயர்ந்துள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசின் பல்வேறு துறைகளும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையால் இந்த வளர்ச்சியை எட்ட முடிந்ததாக பல்வேறு தரப்பு மக்களும் கருத்து தெரிவித்துள்ளனர்.

சிறு-குறு வியாபாரிகளுக்கு மத்திய அரசு செயல்படுத்திய திட்டங்கள் ஆக்கப்பூர்வமான பலனை அளித்துள்ளதாக வேலூரை சேர்ந்த திரு வெங்கடேசன் தெரிவித்தார்.

*(Voice Byte –வெங்கடேசன்– 33 Sec. )*

<<<<<<<<>>>>>

தமிழகத்தில் உள்ள பறவைகள் சரணாலயங்கள் மற்றும் நீர்நிலைகளில் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் மாபெரும் இயக்கம் இன்று தொடங்கப்பட்டது.

சென்னையை அடுத்த பள்ளிக்கரணையில் உள்ள சதுப்பு நில பகுதிகளில் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் இந்த இயக்கத்தை மாநில தலைமைச் செயலர் திரு முருகானந்தம் தொடங்கிவைத்தார்.

மாநிலத்தில் 21 இடங்களில் உள்ள நீர்நிலைகள், பறவைகள் சரணாலயங்கள், பாதுகாப்பு காப்பகங்கள் மற்றும் முக்கிய சதுப்பு நிலங்கள் உள்ள பகுதிகளில் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் தூய்மை இயக்கம் இன்று ஒரேநேரத்தில் நடைபெற்றது.

உதகை மலைப்பகுதியில் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் பணியில் கல்லூரி மாணவர்கள், தன்னார்வலர்கள், வனத்துறையினர் உள்ளிட்டோர் ஈடுபட்டனர்.

<<<<<<<<<>>>>>

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளின் ஓரிரு இடங்களில் வரும் ஐந்து நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

*(Voice Byte – செந்தாமரை கண்ணன் (1)–23 Sec. )*

தென் தமிழக கடலோரப்பகுதிகள் மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் திரு செந்தாமரை கண்ணன் கூறினார்.

*(Voice Byte – செந்தாமரை கண்ணன் (1)–28 Sec. )*

<<<<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவள்ளூர் மாவட்டம் கொசஸ்தலை ஆற்றில் மேற்கொள்ளப்பட்டுவரும் தூர்வாரும் பணிகளை துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் இன்று ஆய்வு செய்தார்.

----------------

காஞ்சிபுரம் மாவட்டம் கீழம்பி ஊராட்சியில் குளம் தூய்மைப்படுத்தும் பணியினை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தொடங்கிவைத்தார்.

-------------

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு, பரமத்தி மற்றும் கபிலர் மலை ஒன்றியத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி இன்று ஆய்வு செய்தார்.

----------------

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியராக திருமதி மிருணாளினி, இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

--------------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு ஆட்சியர் திருமதி அழகுமீனா பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

--------------

அதிக மகசூல் பெறும் விவசாயிகளுக்கு மாநில அரசால் வழங்கப்பட்டுவரும் விருதுக்கு திருவாரூர் மாவட்ட விவசாயிகள் வட்டார வேளாண்மை உதவி இயக்குனரிடம் விண்ணப்பிக்கலாம் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

---------------

கோவையில் இந்திய தர நிர்ணய அமைவனத்தின் சார்பில் "பொது பேருந்து போக்குவரத்து" சேவையில் கடைபிடிக்க வேண்டிய தர விதிகள் குறித்த கருத்தரங்கு இன்று நடைபெற்றது.

-----------------------

கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோவில் ஆவணித்திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

<<<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

காமன்வெல்த் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

அகமதாபாதில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 86 கிலோ எடைப்பிரிவில் Mehak Sharma வெள்ளிப்பதக்கத்தையும், Martina Devi வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் 110 கிலோ எடைப்பிரிவில் Lovepreet Singh வெண்கலப்பதக்கம் வென்றார்.

---------------

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ரங்கி ரெட்டி – சிராக் ஷெட்டி இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

பாரிசில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 21-12, 21-19 என்ற செட் கணக்கில், மலேசியாவின் Aaron Chia – Wooi Yik இணையை வென்றது.

---------------

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சாய் கார்த்திக் – தாய்லாந்தின் Thantub Suksumrarn இணை பட்டம் வென்றது.

-------------

புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் உத்தரப்பிரதேசம் - தெலுகு அணியையும், மும்பை – குஜராத் அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<<<<<>>>>>